2017

மாதாந்த சஞ்சிகை

முடியும் வரை முயற்சிப்போம்

# திறனொளி

THIRANOLI ART & CULTURE MEDIA NETWORK

ஜூலை – ஆகஸ்ட்    25/-    திறன் – 11



திறனொளியின் திறமைக்கான தேர்வு விருது வழங்கும் விழாவின்போது பிடிக்கப்பட்டது.,

## உள்ளே!

வாசகர் வட்டம்
ஆரோக்கியமும் சுகவாழ்வும்
கவிதை தூறல்கள்
குர்ஆன் மதரஸா அறிமுகம்
மாணவர்களின் ஆக்கங்கள்
தீனுல் இஸ்லாம்
மருத்துவத் தகவல்கள்
பல்துறைத் தகவல்கள்
நூல் அறிமுகம்
விளையாடு களம்
களச் செய்திகள்
பல்சுவை அரங்கம்
பள்ளிவாசல் அறிமுகம்
பல்துறை சார்ந்தோரின் பேட்டி
ஆங்கிலம் கற்போம்

திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பு சிறிலங்கா
நடாத்தும்

**திறனொளியின் திறமைக்கான தேர்வின்**
**அடுத்த கட்டமாக**

திறனொளி சஞ்சிகையின் திறன்-12 இனி வெளியீடும் அறிமுகமும்

மண்பதியின் கவிஞர்களின் கவிதைத் தொகுதியான "மண்ணின் குரல்கள்" இருவெட்டு வெளியீடும்

ரமழான் வசந்தம் கேள்வி பதில் வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும்
**விரைவில் நடாத்தப்படவுள்ளது!**

ஏற்பாடு:-    ஊடக பங்காளர்கள்:-

திறனொளி சஞ்சிகையின்
திறன்-12வது இதழ்
புதுப்பொலிவுடன் விரைவில் வெளிவரவுள்ளது



Dr. Al-haj. ZA. Bazeer JP
Proprietor

**BAZEER TRAVELS & TOURS**
Agency for Hajj, Umrah Pilgrims
Reg.No: MRCA/Umrah/143/2015



**Eastern Jewellery**
22, Central Road, Sammanthurai-04.
Tel: 0773621628, 0758704065

## கலைஞர் மேடை

நம் மண்பதியின்
கலைஞர்களை அறிமுகம்
செய்யும் பகுதி
திறன்-12 இலிருந்து
எதிர்பாருங்கள்


தயாரிப்பு:-
அல்-ஹாஜ் எஸ்.அபூபக்கர்
(ஓய்வு பெற்ற அதிபர்)

# புதிய மாணவர்கள் அனுமதி

## ஸலாஹிய்யா அரபுக் கல்லூரி

பிபிலை, கொடிகமுவையில் அமைந்துள்ள மேற்படி அரபுக் கல்லூரிக்கு
ஷரீஆ கிதாபு பிரிவு மற்றும் ஹிப்ழ் பிரிவுக்கு புதிய
மாணவர்களை சேர்த்துக்கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

The Principal
Salahiyya Arabic College
Godigamuwa, Kotabowa, Medagama
0555611689,0753428348,0768365660,0729874456

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின மாகாண மட்டப் போட்டிகள் 2018.05.13 ஆம் திகதி மட்டக்களப்பு மகஜன கல்லூரியில் இடம்பெற்றது. இப்போட்டித் தொடரில் பிரிவு ஐந்துக்கான இலக்கிய விமர்சனம் போட்டியில் கமு/சது/ சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தைச் (தேசிய பாடசாலையைச்) சேர்ந்த உயர்தர கலைப் பிரிவு மாணவன் அம்சார் முகம்மட் இன்சாப் இரண்டாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். படத்தில் அதிபர் அல்ஹாஜ் ஏ.சி.ஏ.எம்.இஸ்மாயில் மற்றும் பொறுப்பாசிரியர் எம் .ஐ. அச்சி முகம்மட் ஆகியோரைக் காணலாம்.



சம்மாந்துறை மாவட்ட ஆயுர்வேத வைத்திய சாலையினால் சம்மாந்துறை கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே மருத்துவ மூலிகைகள் பற்றிய வினா விடைப் போட்டி நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் அல்-அர்ஷத் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் சம்மாந்துறை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சி.எம்.காலித் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின்போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் பரிசில் வழங்கப்படுவதனை படத்தில் காணலாம்.

(நௌஷாட் ஏ கரீம்)


திறனொளி

**திறனொளி**
சஞ்சிகைக் குழு

**பிரதம ஆசிரியர்**
**கலைஞர் ஏ.சி.நௌஷாத்**
(அறிவிப்பாளர்)

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் எஸ்.அப்துல் றாஸிக் JP
(ஓய்வு பெற்ற அதிபர்)
எப்f.எம்.இஹ்ஸான்
இஸ்மாயில் எம் றையூப்f
மௌலவி ஏ.ஆதம்பாவா (B.A)
மௌலவி எம்.ஐ.எம்.கலீல் (தப்லீகி)
அல்-ஹாபிழ் பி.எம். பர்ஹானுத்தீன்
எழுத்தாளர் ஏ.பி.முகம்மட்
கவிதாயினி எம்.ஐ.றமீஸ் நிசா Tr

**ஆலோசகர்**
கலாபூஷணம் மாறன் யூ ஸெயின்
(ஓய்வு பெற்ற அதிபர்)

டைபிஸ்ற் - றிமோஸ் டெக்



Editor
Thiranoli
112, Firthous Palli Road
Sammanthurai - 03
Hot Line :- 067 490 54 03
E-mail:- thiranoliacmn@gmail.com



சம்மாந்துறையில் தகவல் தொழிநுட்பத் துறையின் முன்னோடி
**ஐகோசிஸ்**
iGosyz
technological service provider

# களச் செய்திகள்


தயாரிப்பு - இஸ்மாயில் எம் நையூப்



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் நலன் விரும்பிகளால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையை மையமாக வைத்து உருவாக்கப்பட்டு இயங்கிவரும் சம்மாந்துறை மக்களின் சுகாதார நலன்விரும்பி அமைப்பினால் (Well Wishers Of BH/Str) வெளி நோயாளர் பிரிவு, கிளினிக் ஆகிய இடங்களில் சிகிச்சை பெறும் நோயாளிகள் சுத்தமான நீரை அருந்த வேண்டும் என்ற நோக்கில் இரண்டு நீர் சுத்திகரிக்கும் உபகரணங்கள் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் Dr. YBM அப்துல் அஷீஷ் அவர்களிடம் அண்மையில் கையளிக்கப் பட்டது.

வெளி நோயாளர் பிரிவுக்கான குடி நீர் சுத்திகரிப்பானை Reessa Str ஸதகா அமைப்பும் கிளினிக் குடிநீர் சுத்திகரிப்பானை Str Boys 'நமக்காக நாம்' என்ற ஸதகா அமைப்பும் சம்மாந்துறை மக்களின் சுகாதார நலன்புரி அமைப்பினூடாக ஸதகா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

(படம், தகவல்: இஹ்சான்)



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மாணவர்களுக்கிடையே மனித உரிமைகள் பற்றிய தெளிவையும், அரசியலமைப்புச் சட்டம் பற்றிய தெளிவையும், அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் பற்றிய அறிவையும் வளர்க்கும் நோக்கில், மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் என்ற அடிப்படையில் புதிர்ப் போட்டியை நடத்தியது. இதில் எமது சம்மாந்துறையூரின் தேசியக் கல்லூரி அம்பாறை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பாடசாலைகளையும் வென்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.


அதேபோன்று 2018.05.02 மட்டக்களப்பு டேவர் மண்டபத்தில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியில் மேலும் 06 பாடசாலைகளையும் வென்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டு எமது சம்மாந்துறையூரின் தேசிய பாடசாலை தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## காதல் பித்தனின் கிறுக்கல் கவிதை தொகுதி நூல் கையளிப்பு




பொத்துவில் அஜ்மல்கான் எழுதிய "காதல் பித்தனின் கிறுக்கல் " கவிதை தொகுதி நூலினை திறனொளி சஞ்சிகையின் பிரதம ஆசிரியரியர் ஏ.ஸி.நவ்சாட் அவர்களிடம் திறனொளி ஊடக வலையமைப்பின் காரியாலயத்தில் வைத்து கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். அருகில் எழுத்தாளரும், திறனொளி வலையமைப்பின் நிருவாக உறுப்பினருமான ஏ.எல்.எம்.மர்சூக் காணப்படுகின்றார்.

(நமது செய்தியாளர்)



உலகப் பாவலர் மன்றத்தினால் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இணைய வாயிலாக நடாத்தப்பட்ட வியர்வையால்புதுயுகம்படைப்பவர்களேஎன்றதலைப்பில்முதலிடம் பெற்றமைக்காக சம்மாந்துறை கவிஞர் அச்சு முஹம்மது அவர்களுக்கு கவிச் சூரியன் சான்றிதழ் அண்மையில் வழக்கப்பட்டது. சான்றிதழை உலகப் பாவலர் மன்றத்தின் தலைவர் ஈழத்துக் குயில் கவிஞர் அஜ்மல்கான் அவர்களால் திறனொளி காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கபட்டதனை படத்தில் காணலாம்.

(நமது செய்தியாளர்)

உங்கள் கிராமத்தில் நடைபெறும் கலை கலாசார
மற்றும் பொது விடயங்களை
செய்திகளாக திறனொளி சஞ்சிகையில்
பிரசுரிக்க வேண்டுமானால் தொடர்பு கொள்ளுங்கள்
எப்.எம்.இஹ்சான் - 0778964694 அல்லது
மின்னஞ்சல் thiranoliacmn@gmail.com

திறனொளி
சஞ்சிகைக்கு கிராமம் ரீதியாக
செய்தியாளர்கள், நிருபர்கள் தேவை தொடர்புகளுக்கு
பிரதம ஆசிரியர்
0779175963

"கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்"

# பள்ளிவாசல் அறிமுகம்

தயாரிப்பு:-
கலாபூஷணம் எஸ்.அப்துல் றாஸிக் JP
(ஓ. பெற்ற அதிபர். மு.தவிசாளர்- மஜ்லிஸ் அஷ்ஷூறா. சம்மாந்துறை)

## மஸ்ஜிதுல் உம்மாஹ்

சம்மாந்துறை பட்டினம் பிரதேசத்தில் நான்காவதாக அமையப் பெற்ற பள்ளிவாசல்தான் மஸ்ஜிதுல் உம்மாஹ் பள்ளியாகும். சம்மாந்துறை பூ மரத்தடி சந்தியில் இப்பள்ளி அமைந்துள்ளது. "பூ மரத்தடி பள்ளி" என்றும் இப்பள்ளியை அழைத்துள்ளனர். இப்பள்ளிவாசல் வளவு உ.லெ.முஹம்மது இஸ்மாயில் (கண்ணாடி மரைக்கார்) மர்ஹூம் அன்வர் இஸ்மாயில் அமைச்சர் அவர்களின் தாயின் தகப்பன் அவர்களுக்கு சொந்தமானது. ஆரம்ப காலத்தில் இவ் வளவு, மரவள்ளி, சோளம் விற்பனை நிலையமாகவும், தலை முடி, முகச்சவரம் சுத்தம் செய்யும் இடமாகவும் பாவிக்கப்பட்டன. பூமரத்தடி சூழலில் உள்ள பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில், கண்ணாடி மரைக்கார், தான் பெரிய பள்ளி மரைக்காராக இருந்த போது தனது வளவில் மத்ரஸா (ஓதப்பள்ளி) நடாத்துவதற்கு அனுமதி வழங்கினார்.

மரைக்கார் சபையினால் சிறு கட்டிடம் அமைக்கப்பட்டு 1942ல் மத்ரஸா நடைபெற்று வரலாயிற்று. பூ மரத்தடி சூழலில் வாழ்ந்த மக்கள் ஐவேளை தொழுகைக்காக தைக்காபள்ளி, கோசப்பா பள்ளி முகையதீன் பள்ளிகளுக்கே தொழுகைக்குச் செல்வர். இப்பிரதேச மக்களின் வேண்டுதலை கவனத்திற் கொண்ட நம்பிக்கையாளர் சபை, கண்ணாடி மரைக்காரினால் அன்பளிப்பு செய்யப்பட்ட வளவில் 1949இல் பள்ளிவாசலுக்கான சிறிய கூட்டம் அமைக்கப்பட்டு தொழுகையும் நடைபெற்று வரலாயிற்று.

பூ மரத்தடிப்பள்ளி என்ற பெயருடன், மத்ரஸாபள்ளி, புதுப்பள்ளி என்ற ஒவ்வொரு பெயரிலும் ஒவ்வொரு வரலாறு பொதிந்திருப்பதைக் காணலாம். இச்சந்தர்ப்பத்தில் இன்னுமொரு நிகழ்வு பூ மரத்தடிச் சந்தியில் ஏற்பட்டதையும் நினைவுக்குக் கொண்டுவருகின்றேன். ஐவேளை தொழுகைக்கு மக்கள் வந்து செல்வதால், பூ மரத்தடி சனநடமாட்டம் அதிகமாக காணப்பட்ட முக்கிய இடமாக காணப்பட்டது.

ஒரு நாள் முகர் தொழுகை கலைந்து மக்கள் கூட்டமாக பாதையில் நின்று கொண்டிருந்தவேளை, மழைக்காலம் பள்ளிவாசல் முன்னால் உள்ள "ஆரைப்பற்றை" யில் அதிகளவான நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. பிரதான பாதையில் "கிடா" மாடுகளால் பூட்டப்பட்ட வண்டில் ஒன்று, சனநடமாட்டத்தினால் விரட்டப்பட்டதாக, ஆரைப்பற்றையில் தண்ணீரைக் கண்டதும் வண்டிலுடன் ஆரைப்பற்றையில் விழுந்துவிட்டது.

இந் நிகழ்வை கவனத்தில் எடுத்துக் கொண்ட பட்டின சபை பாதுகாப்புக்காகவும், மக்கள் இருப்பதற்காகவும் 2 அடி உயரம், 8 அடி நீளமான ஒரு கட்டு கட்டப்பட்டது. பிரயாணிகள், ஏனையோர் இக்கட்டில் அமர்ந்து செல்வது வழக்கமாகிவிட்டது. காலவோட்டத்தில் இக்கட்டுக்கு மக்கள் "புதுப்பள்ளி லஸ்தியார் கட்டு" என்று பெயர் சூட்டினர். இக் கட்டில் அமரும் வாடிக்கையாளர்களில் பலர் தொழுகை யாளர்களாக மாறிய சம்பவங் களும் உண்டு. புதுப்பள்ளி, பள்ளிவாசலுக்கான எந்த அடையாளமும் தென்படாத வீடு போன்ற முகப்பாக காணப்பட்டதால், நுழைவாயிலில் அடையாளத்துக்கான முகப்பு ஒன்றை இஸ்மாயில்துரை எஞ்ஜினியர் அமைத்துக் கொடுத்தார்.

1987ல் இஸ்லாமிய நாமத்துடனான பெயர் ஒன்று வைக்க வேண்டும் என்ற முடிவுக்கேற்ப "மஸ்ஜிதுல் உம்மாஹ்" என்ற பெயரோடு இயங்கி வருகின்றது. இன்று நவீன முறையில் இப் பள்ளி மிளிர்ந்து கொண்டிருப்பதுடன், பூ மரச்சந்தி மங்கி உம்மாஹ் பள்ளி சந்தி என்ற பெயர் நிலை பெற்று வருவதையும் அறிவோம். வீதி அபிவிருத்தி வேலைகளின் போது "லஸ்தியார் கட்டு" அகற்றப்பட்டு விட்டது.

சம்மாந்துறையில் முதன் முதலாக
குளிரூட்டப்பட்ட வசதியினைக் கொண்டதும்
இப்பள்ளிவாசலாகும்.

அமானிதத்தை நிறைவேற்றாதவனுக்கு மார்க்கமே இல்லை

**ஹஸ்ரத் அலி (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் :**

ஹஸ்ரத் அலி (ரழி) அவர்களின் அவையில் வீற்றிருந்தோம். அப்போது அங்கு ஒரு மனிதர் வந்தார். அவர் மிகவும் உயர்ந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். நேரே றஸூலுல்லாஹ் அவர்களிடம் சென்று "நாயகமே இந்த இஸ்லாம் மார்கத்தில் மிக இலகுவான காரியம் எது? மிகக் கஸ்டமான காரியம் எது? என்று அறிவித்துத் தாருங்கள் என்று கேட்டார். அதைக் கேட்ட றஸூலுல்லாஹ் பின்வருமாறு கூறினார்கள். "மார்கத்தில் மிக இலகுவானது அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸூலுஹு என்று கூறுவதாகும். மார்கத்தில் மிகக் கடினமானது ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பை (அமானிதத்தை) நிறைவேற்றுவதாகும். ஏனெனில், அமானத்தை நிறைவேற்றாதவனுக்கு மார்க்கமுமில்லை தொழுகையும் இல்லை நோன்புமில்லை" என்று கூறினார்கள்.

-கபஸாத் மின் ஹயாதிர் றசூல்-

(அல்-ஹாஜ் ஏ.ஸி.ஏ.எம்.புகாரி அவர்களின் வரலாற்றிலோர் ஏடு நூலிலிருந்து)

**பள்ளிவாசலுக்குள் நுழையும் போது**

اَللّٰهُمَّ افْتَحْ لِي أَبْوَابَ رَحْمَتِكَ

அல்லாஹும்மஃப்தஹ் லீ அப்வாப ரஹ்மத்திக்க

பொருள் : இறைவா! உனது அருள் வாசல்களை எனக்காகத் திறப்பாயாக

ஆதாரம்: முஸ்லிம்

# ஆரோக்கியமும் சுகவாழ்வும்

தயாரிப்பு:-
Dr. MCM.காலித் (BUMS-SL)– வைத்திய அத்தியட்சகர்
மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை, சம்மாந்துறை

## மன அழுத்தம்



மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளால் அவன் பல விதமான நெருக்கீடுகளுக்கு உட்படுகின்றான். இவ்வாறாக உளரீதியான பிரச்சினைகள் சமாளிக்க முடியாத அளவில் நெருக்கத்திற்குள்ளாகின்றதன் விழைவாக மனம் பாதிப்படைகின்றது. மன அழுத்தம் ஏற்படுகின்றது. மன இறுக்கமானது உள நெருக்கீடு எனவும் கருதப்படுகின்றது. இவ்வழுத்தம் எல்லை மீறும் போது அதன் விழைவாக நடத்தை பிறழ்வுகளும் உடல், உளரீதியான நோய்களும் ஏற்படுகின்றன.

உலகில் பிரச்சினை இல்லாதமனிதர்களே இல்லை எனலாம் அவ்வாறாயின் அணைவருக்கும் மன அழுத்தம் ஏற்படுவது இயல்பே எனினும் இம் மன அழுத்தத்தை எல்லை மீறாது பார்த்துக் கொண்டால் எமக்கு ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

மன அழுத்தம் உள்ளதா? என்பதை அறிந்து கொள்ள மன அழுத்தம் ஏற்பட்டுள்ளதற்கான அதன் குணங்குறிகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

1. பதட்டம்
2. பயம்
3. சோர்வு நிலை
4. இயலாமை

எமது எண்ணத்தில் தோன்றும் அறிகுறிகள்:-

- தாழ்வு மனப்பான்மை
- மனதை ஒருமுகப்படுத்த முடியாமை
- எதிர்காலத்தை பற்றிய பயம்
- நம்பிக்கையின்மை
- இருப்புக் கொள்ளாமை
- எதிலும் தோல்வி நிலை எமக்கு என்ற எண்ணம்

எமது நடத்தையில் தோன்றும் அறிகுறிகள் :

- மாற்றங்கள்
- காரணமின்றி அழுதல்
- உற்சாகமின்மை
- உரத்துச் சிரித்தல்
- கதைக்கும் போது குரல் கம்முதல
- புகைப்பழக்கத்திற்கு அடிமையாதல்
- மதுப்பழக்கத்திற்கு அடிமையாதல்
- போதப்பாவனையில் அடிமையாதல்
- ஆதிகமாக உண்ணுதல் அல்லது
- பசியின்றி இருத்தல்

எமது உடற் தொழியியல் ரீதியாக

- உள்ளங்கை வியர்வை
- நெஞ்சு படபடப்பு
- தொண்டை உலர்தல்
- அடிக்கடி சிறுநீர் போதல்
- நித்திரயின்மை
- அஜீரணம்
- வயிற்றோட்டம்

போன்ற நிலமைகள் சில ஏற்படலாம். ஆல்லது பல காணப்படலாம். இவை ஏற்பட்டிருந்தால் நாம் சிறிதளவேனும் மன அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கின்றோம். என்பது தெரியவரும் எனினும் இவை எல்லை மீறும் போதுதான் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?..............

(தொடரும்)


# இப்ஹாம் என்டபிரைசஸ்

அனைத்துவித மூலிகை மருந்து மாத்திரைகள், பட்டோலைச் சரக்குகள், வாசனைத் திரவியங்கள், அரிதான மூலிகைகள்



மூக்குக் கண்ணாடிகள்

**அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள**

**இப்ஹாம் என்டபிரைசஸ்**

இப்ஹாம் என்டபிரைசஸ்
ஹிஜ்ரா சந்தி
பொலிஸ் வீதி
சம்மாந்துறை
தொ.இல:- 0672260615/ 0771895865.

# மாணவர் பல்சுவை அரங்கம்

தயாரிப்பு:- ஏ.ஸி.றிமோஸ்



## நிகழ்வுகள் July 12

**1641** - போர்த்துக்கல்லுக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
**1776** - கப்டன் ஜேம்ஸ் குக் தனது மூன்றாவது கடற் பயணத்தை ஆரம்பித்தார்.
**1898** - செனான் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
**1920** - சோவியத்-லித்துவேனிய அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. லித்துவேனியாவை சோவியத் ஒன்றியம் தனிநாடாக அங்கீகரித்தது.
**1971** - ஆத்திரேலியாவில் பழங்குடியினரின் கொடி முதன் முறையாகப் பறக்கவிடப்பட்டது.
**1993** - ஜப்பானில் 7.8 அளவு நிலநடுக்கம், மற்றும் சுனாமி தாக்கியதில் 202 பேர் கொல்லப்பட்டனர்.

## நிகழ்வுகள் July 15

**1816** - பிரெஞ்சு இயற்பியலாளர் அகத்தீன் பிரெனெல் ஒளியின் விளிம்பு விளைவுக்கான பின்னிணைப்பாகத் தனது புகழ் பெற்ற பிரெனெல் வலயங்கள் பற்றி அறிமுகப் படுத்தினார்.
**1834** - எசுப்பானிய திரிபுக் கொள்கை விசாரணை மன்று 356 ஆண்டுகளின் பின்னர் கலைக்கப்பட்டது.
**1860** - இலங்கையின் பிரதம நீதியரசராக சேர் எட்வேர்ட் செப்பர்ட் கிறீசி நியமிக்கப்பட்டார்.
**1870** - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோர்ஜியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்தது. அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக் கப்பட்டது.
**1946** - ஐக்கிய இராச்சியம் வடக்கு போர்னியோவை (இன்றைய மலேசியாவின் சபாவில்) தனதாக்கியது.
**1955** - அணுவாயுதங்களுக்கு எதிராக 18 நோபல் விருதாளர்கள் உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். பின்னர் மேலும் 34 பேர் கையெழுத்திட்டனர்.
**1975** - விண்வெளிப் போட்டி: முதலாவது அமெரிக்க-சோவியத் இணைந்த விண்வெளித் திட்டம் அப்பல்லோ-சோயூசு விண்கலம் ஐந்து அமெரிக்க-சோவியத் விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது.
**1983** - பாரிசில் ஓர்லி விமானநிலையத்தில் ஆர்மீனியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 55 பேர் காயமடைந்தனர்.
**2003** - டைம் வார்னெர் நெட்சுகேப் நிறுவனத்தைக் கலைத்தார். இதே நாளில் மொசில்லா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
**2006** - டுவிட்டர் சமூக வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டது.
**2014** - மாஸ்கோவில் தொடருந்து ஒன்று தடம் புரண்டதில் 24 பேர் உயிரிழந்தனர், 160 பேர் காயமடைந்தனர்.

ஜே.அன்ஷத் அகமட்
அஸ்-ஸலாஹிய்யா அரபுக் கல்லூரி
மெதகம
பிபில

## நாங்கள் மேலதிக நீரை அருந்த வேண்டிய சந்தர்பங்கள்



விளையாட்டு, உடற்பயிற்சி நேரங்களில்
அதிக வியர்வை ஏற்படும்போது.
வெப்பமான நாட்களின்போது.
அதிக காற்று வீசும் காலங்களில்.
மின் விசிறி, வளிச்சீராக்களின்
பாவனையின்போது.
காய்ச்சல், வயிற்றோட்டத்தினால்
பாதிக்கப்படும்போது.

ஹுமாதா சஹ்ரி
கமு/ சது/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம்
இறக்காமம்.

படத்திற்கான கவிதை இல-04க்கான கவிதை

ஒரு மீன் ஓட உறு மீன் வரும் வரை
காத்திருக்கும் கொக்காய்
கொழுத்த சீதனம் வரும் வரை
காத்திருக்கிறான் மண மகள்

ஏ.ஆர்.அஜீபா
அம் 12ம் வீதி
உடங்கா-01
சம்மாந்துறை

ஆக்கங்களை எழுதி அனுப்பி பரிசினை பெற்றுக்கொள்ளுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி
"மாணவர் பல்சுவை அரங்கம்"
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி,
சம்மாந்துறை-03

## விடுகதைகள்

1. காவல் காக்கும், ஆனால் நாயல்ல. காலை கடிக்கும், ஆனால் செருப்பல்ல. அது என்ன?
- முள் செடி
2. ஒளி தரும் விளக்கல்ல, வெப்பம் தரும் நெருப் பல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல அது என்ன?
- சூரியன்
3. கண்ணுக்குள் இருப்பவன் கவலைக்கும் மகிழ்ச்சிக்கும் எட்டிப் பார்ப்பான் அவன் யார்?
-கண்ணீர்
4. உதைக்குப் பறப்பவனை துரத்துவார்கள் சிலர், அதை ரசிப்பார்கள் பலர் அவன் யார்?
-கால்பந்து விளையாட்டு
5. புள்ளிக்குச் சொந்தக்காரன், துள்ளி ஓடுவதில் கெட்டிக்காரன் அவன் யார்?
-மான்
6. ஒலிப்பான், ஒலியை நிறுத்தினால் தகவல் கொடுப்பான் அது என்ன?
-டெலிபோன்

எஸ்.எப்.எச்.ஜீனாபா
கமு/சது/முஸ்லிம் மத்திய கல்லூரி
சம்மாந்துறை

# ஆங்கிலம் கற்போம்

By :
Mr. M.T. RuMi KhAAn
(Director of Royal Future
The college of effortless way)

## Psychology of Spoken English

சென்ற இதழில் Grammar இல்லாமல் ஆங்கிலம் கற்றுக்கொள்ள முடியுமா? என்ற கேள்விக்காண விடை மற்றும் ஆங்கிலத்தில் காணப்படும் வாக்கிய அமைப்பு முறை (sentence pattern) தான் எமது ஆங்கில பேச்சு திறமைக்கு தடைக்கல்லாக அமைகிறது என்பது பற்றி பாரத்தோம்.

**மொழிபெயர்க்காமல் எப்படி ஆங்கிலத்தில் வாக்கியம் அமைப்பது?**

சோறு ஏதாவது மீதி இருக்கிறதா ? என்ற வாக்கியத்தை எப்படி நாம் ஆங்கிலத்தில் சொல்வது.
ஏதாவது ஒரு பொருள் மீதம் இருக்கிறதா என்று கேட்க ஆங்கிலத்தில் Is there any (thing) left? எனும் phrase பயன்படுத்த முடியும்.
உதரணமாக சோறு ஏதாவது மீதி இருக்கிறதா என்று கேட்பதற்கு (thing) எனும் இடத்தில் rice (சோறு) என்பதனை சேர்ப்பதன் மூலம் உருவாக்கிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| Is there any rice left? | சோறு ஏதாவது மீதி இருக்கிறதா? |
| Is there any curry left? | கறி ஏதாவது மீதி இருக்கிறதா? |
| Is there any sugar left? | சீனி ஏதாவது மீதி இருக்கிறதா? |
| Is there any food left? | உணவு ஏதாவது மீதி இருக்கிறதா? |
| Is there any water left? | தண்ணீர் ஏதாவது மீதி இருக்கிறதா? |

இப்பொழுது இதுபோன்ற வாக்கியங்கள் உங்களாலும் இலகுவான முறையில் உருவாக்க முடிகிறதல்லவா!
இது போன்றுதான் எமது Royal Future யினால் Effortless way to speak English என்ற தொனிப்பொருளில் முற்றிலும் மாறுபட்ட பாடவிதானம் உருவாக்கி இலகுவான முறையில் ஆங்கிலம் சரலமாக பேச என்னால் முடிந்தளவு வழி அமைத்திருக்கின்றேன்.

சரி இனி நாம் பாடவிதானத்துக்குள் செல்லலாம்.

ஆங்கிலத்தை பொறுத்தவரை 26 எழுத்துக்கள் காணப்படுகிறது. அந்த 26 எழுத்துக்களைக் கொண்டு பல ஆயிரம் சொற்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த சொற்களை வைத்து நாம் command, phrase, clause, sentence போன்றவற்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இன்ஷாஅல்லாஹ் வரும் இதழில் Effortless way to speak English என்ற தொனிப்பொருளில் பாடத்தை ஆரம்பிப்போம்.

நன்றி.

It's easy if you try

Better luck next time.......


With loving M.T. Rumaiz Muhammad (CEO of Royal Future Sammanthurai 077 819 50 55)

## சம்மாந்துறையில் தமிழ் ,முஸ்லிம் மக்களின் காணிகளை தொல் பொருள் வலயமாக்க முயற்சி



சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட புதிய வளதாப்பிட்டி பிரதேசத்தில் தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான காணிகள் தொல்பொருள் இடமென அண்மையில் தொல் பொருளியல் திணைக்கள அதிகாரிகளினால எல்லைகள் இடும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், திகாமடுல்ல மாவட்ட பாராளமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூரின் தலையீட்டினால் இம்முயற்சி தடுத்து நிருத்தப்பட்டது. புதிய வளதாப்பிட்டி ஆண்டிராயன்கனத்தை எனும் பிரதேசத்தையும் அதனை அண்மித்த பகுதிகளில் காணப்படும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான காணியில் புராதன குடியேற்றங்களின் எச்சங்கள் கானப்படுவதாக காரணம் காட்டி இப்பிரதேசம் பாது காக்கப்பட்ட தொல்பொருள் இடமென தெரிவித்து தொல்பொருளியல் திணைக்கள அதிகாரிகள் இக்காணிப் பகுதியில் எல்லைக்கற்கள் நடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். காணி உரிமையாளர்கள் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூரின் கவனத்திற்கு கொண்டு வந்ததனையடுத்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துசித பீ. வணிகசிங்க மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எம். முஹம்மட் ஹனீபா ஆகியோரிடம் பாராளமன்ற உறுப்பினர் தொடர்பு கொண்டு இதனைத் தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் சம்மாந்துறை பிரதேச உதவிச் செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையிலான குழுவினர் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு சென்று தொல்பொருளியல் திணைக்கள அதிகாரிகளுடான பேச்சு வார்த்தையினையடுத்து தற்காலிகமாக எல்லைக் கற்கள் நடும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது. இதனையடுத்து பாராளமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர், பிரதேச உதவிச் செயலாளர் எம்.எம். ஆஷிக், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூராவின் தலைவர் ஐ.ஏ. ஜப்பார் உட்பட காணி உரிமையளர் குறிப்பிட்ட பிரதேசத்திற்கு விஜயம் செய்து இப்பிரதேசங்களை பார்வையிட்டனர். இதனையடுத்து இப் பிரதேச காணி உரிமையாளர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடினார். இதற்கான தீர்வினை சம்பந்தப்பட்ட தொல்பொருளியல் திணைக்கள அதிகாரிகளுடன் பேசி பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்தார்.

தொடர் 15ம் பக்கம்



# கவிதை தூறல்கள்

தயாரிப்பு - கவிதாயினி எம்.ஐ. நமீஸ் நிஷா

## படத்திற்கான கவிதை இல:-04 க்கான கவிதைகள்

இந்த மாலைப் பொழுதினில்
இப்பறவை தனித்திருக்கிறது
ஏனென்றால் செல்லும் தேசம்
தெரியா நேசப் பறவையாய்
நிலைத்து நிற்கிறது!

எம்.எப்.அதீஹா
தரம்-09
கமு/சது/சபூர் வித்தியாலயம்
சம்மாந்துறை

அலை அலையாய்த் துன்பங்கள்
அடுத்தடுத்து வந்தாலும்
மலையைப் போல உறுதியுடன்
மண்ணில் வாழப் பழகுவோம்!

எம்.எப்.தஸ்ரிபா
தரம்-09
கமு/சது/அல்-அஸ்கர் வித்தியாலயம்
வரிப்பத்தான்சேனை

அந்தி சாயும் நேரத்திலே
அர்த்தமில்லாமல் காத்திருக்கிறாயா?
ஆதவனை ஆர்ப்பரிக்கவா
அலைகளை அணைக்கவா
உன் இரு சிறகுகளும்
இன்பமாய் இசை மீட்டவா

எல்.எப்.ஹஸீபா
தரம்-11
கமு/சது/மத்திய மகா வித்தியாலயம்
சம்மாந்துறை

வேதனை தரும்
உறவை விட
வேண்டியதை தரும்
இயற்கையின் இன்பம்
மேலான வரம்

வை.பி.பாத்திமா சிபா
97, அம்பாரை வீதி
சம்மாந்துறை

இவர்களுக்கு திறனொளியின் பாராட்டுக்கள்

## படத்திற்கான கவிதை இல: 05



இப்படத்திற்குப் பொருத்தமான நான்கு வரிக் கவிதைகளை எழுதி அனுப்புங்கள்


படத்திற்கான கவிதை இல-05
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03

### உயர்வான உயிரெழுத்து

அன்பால் ஏற்படுவது - ஒற்றுமை
ஆணவத்தால் ஏற்படுவது - கர்வம்
இன்பத்தின் எல்லை - துயரம்
ஈயாதோருக்கு அதிகரிப்பது - பகைமை
உண்மையின் பரிசு - நட்பு
ஊர்க்கத்தால் கிடைப்பது - வெற்றி
என்றும் நிலைத்திருப்பது - கல்வி
ஏழ்மையிலும் பிரகாசிப்பது - அறிவு
ஐயம் ஏற்படின் வருவது - சோர்வு
ஒழுக்கத்தால் அதிகரிப்பது - நற்சிந்தனை
ஓதுவதால் கிடைப்பது - மனஅமைதி
ஔவை எமக்களித்தது - நல்லொழுக்கம், ஆத்திசூடி

"சமூகமாமணி" ஏ.வெம்.முஸ்தபா (சுக்கூர்)
சம்மாந்துறை

### அன்பு



பணம் பார்த்து வரும் அன்புக்கு
பாசமில்லை
மனம் பார்த்து வரும் அன்புக்கு
மரணமில்லை
நிறம் பார்த்து வரும் அன்புக்கு
நிரந்தரமில்லை

ஹஸ்மத் சிரோனபா
தரம்-08
கமு/சது/மத்திய மகா
வித்தியாலயம்
சம்மாந்துறை

உங்கள் கவிதைகளுக்குக்
களம் தருகிறது திறனொளி.
எழுதி அனுப்ப மறவாதீர்கள்!

கவிதைத் தூறல்கள்
திறனொளி
112, பிர்தௌஸ் பள்ளி வீதி
சம்மாந்துறை-03

ஈமெயில்: thiranoliacmn@gmail.com

# தீனுல் இஸ்லாம்

தயாரிப்பு – **மௌலவி எம்.ஐ.எம்.கலீல்** (தப்லீகி)

## நோன்புப் பெருநாள்

நோன்புப் பெருநாள் இதன் மறு பெயர் ஈகைத் திருநாள் ரமழான் மாதம் முழுவதும் இறைவனது கட்டளைக்காக பசி, தாகத்தை பொறுத்ததன் பரிசு நாம் எல்லோரும் அன்புடன் வரவேற்கும் நாள் ஏழைகளின் அடுப்புகள் புகையும் நாள். அது ஈர்ந்து ஏழைகளுக்கு வழங்கும் நாள் நோன்புப் பெருநாள்.


ரமழான் பூரணமடைந்து அடுத்த மாதமான ஷவ்வால் பிறை தென்பட்ட மாத்தத்திலே தொடங்கி மறுநாள் மஃரிப் தொழுகையோடு அது எம்மிடம் இருந்து விடை பெற்று விடும். இறைவன் அந்நாளில் எந்த முஸ்லிமும் நோன்பு பிடித்தோ அல்லது வேறு எக்காரணத்தினாலுமோ பசி தாகத் தோடு இருப்பதை தடுத்திருக்கின்றான். அந்நாளில் அனைவரும் “அல்லாஹ் அக்பர் , அல்லாஹ் அக்பர் , லாஇலாஹ இல்லல்லாஹ் அல்லாஹ் அக்பர்” என்ற வாசகத்தை மொழிந் தவர்களாக, அதனை கொண்டு இறை பெருமையை உரக்க உல கிற்கு எடுத்துக் கூறியவர்களாக காணப்படுதல் சாலச் சிறந்ததாகும்.

அச்சிறப்பு மிகும் நாளின் சுபஹ் தொழுகையை நிறை வேற்றியதன் பின்னால் கண்மணி நாயகம் எங்கள் ஈருலகத் தலை வர் மாநபி முஹம்மது (ஸல்) அவர்களது வழிகாட்டுதலின் பிர காரம் புணித இந்நாளுக்காக என்று குளித்து தூய்மையாகி புத்தாடைகள் அணிந்து தலைமுடியை எண்ணெய்யிட்டு சீவி நறுமனம் கமழ மூன்று பேரீத்தம் பழங்களை ருசித்து நீர் பருகி பெருநாள் தொழும் திடலை நோக்கி விரைவது ஒவ்வொரு முஸ்லிமின் திருப் பணியாகும். மேலும் அத்தொழுகைக்கு முன்னால் ஸகாதுல் பித்ர் என்ற ஒரு கடமை, பெருநாள் தினத்தன்று ஒரு மனிதனின் செல வீனத்தின் கீழ் வாழ்கிற தாய், தந்தை, பாட்டன், பாட்டி, மகன், மணைவி, பேரன் என அணைவருக்குமான பெருநாள் தினத்திற் கான முழுச் செலவும் தாண்டி மேலதிகமாக பொருளாதாரம் இருந் தால் அந்நாட்டின் தேசிய உணவாக்கக் கருதப்படும் உணவை (நம் நாட்டின் அரிசி) எம்மில் நடுத்தரமான ஒருவர் இரு கைகளாலும் அள்ளுகிற இரு அள்ளுகள் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும்.

இப்புனிதமான நாளில் இரத்த உறவுகளை சென்று சந்தித்து உறவாடி அன்பளிப்புகள் வழங்கி இறைவனுக்கும் நன்றி செலுத்தி நல்லவிடயங்களில் ஈடுபடுவது முக்கிய விடயமாகும். வீண் விளையாட்டு கேளிக்கைகளில் ஈடுபட்டு இந்நாளின் புனித்த் தன்மையை பாழாக்காமல் பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லி மின் கடமையாகும். பொறாமை, குரோதம், விட்டுக் கொடுக்காமை, அநியாயம் போன்ற செயல்ககளில் இருந்து விலகி இறைவனை அதிகம் வழிபட்டு நன்றி செலுத் துபவனாக இந்நாளில் எவர் மாறுகின்றாரோ அவர் நிதர்சனமான பெருநாளை அடைந்த பாக்கிய சாலியாவார்.

தொகுப்பு: மாணவர் ஜாமிஅதுல்பலாஹ் அரபுக் கல்லூரி காத்தான்குடி
அல் ஹாபிழ், மௌலவி A.J. ஷாக்கிர் சாலிம்

நாம் அல்லாஹ்வின் அருளால் ரமழானை அடைந்துள்ளோம். அல்-ஹம்துலில்லாஹ் நோன்பு என்பது எமக்குத் தரப்பட்ட அல்லாஹ்வின் அருளாகும். இது எம்மீது ஹிஜ்ரி 2ம் ஆண்டு சஃபான் மாதம் கடமையாக் கப்பட்டது. “யாஅய்யுஹல்லதீன ஆமனூ குதிப அலைக்குமுஸ் ஸியாம் கமா குதிப அலல் லதீன மின் கப்லிகும் லஅல்லகும் தத்தகூன்”




நோன்பு எம்மீது மட்டும் கடமையாக்கப்பட வில்லை எமக்கு முன்னால் வாழ்ந்த சமூகத் தாருக்கும் கடமையாக்கப்பட்டது.

ரமழான் மாதம் முழுவதிலும் அல்லாஹ் வின் அருளும் பாவ மன்னிப்பும், நரக விடுத லையும் உள்ளது. ரமழான் மாத இரவில் நோன்பாளிகளுக்கு கூலி வழங்கப்படும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “ யார் ரமழான் மாதத்தில் ஈமானுடனும், நன்மையை ஆதரவு வைத்தவராகவும் நோன்பு வைப்பாரோ அவரு டைய முந்திய பாவங்களும் மன்னிக்கப்படும். ரமழான் சிறந்த ஒழுக்கங்களை கற்றுத் தருகின்றது. நோன்பு நோற்ற நிலமை யில் சண்டை பிடிப்பது, பொய், புறம், கோள், அவதூறு போன்றவைகளில் ஈடுபடுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். இந்த புனிதமிகு ரமழான் மாதம் முஸ்லிம்களின் அளப்பெரும் பொக்கிஷமாகும்.

ரமழான் மாத முதல் இரவில் ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. நோன்பு என்றால் நிய்யத்துடன் அதிகாலையில இருந்து சூரியன் மறையும் வரையிலும் உண்ணுவது, குடிப்பது, மனோ இச்சைகளில் இருந்து தவிர்ந்து கொள்வதாகும். நோன்பாளிகளுக் கான சிறந்த கூலிகளை அல்லாஹ்வை தனது புறத்தில் இருந்து வழங்குவான். மேலும் சுவனத் தில் இருந்து “ரய்யான்” எனும் வாசல் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். புனிதமான எம்மீது விதிக்கப்பட்ட இந்த ரமழான் மாதத்தை கண்ணியப்படுத் தாமல் கழித்து விட்டால் இம்மை மறுமையின் நஷ்டத்திற்கு வழிகேடாகிவிடும்.

முஹம்மது நிப்ராஸ் பாத்திமா ஷாக்கியா
தரம்-06, முஸ்லிம் மத்திய கல்லூரி
சம்மாந்துறை



# குர்ஆன் மத்ரஸா அறிமுகம்

தயாரிப்பு:- அல் - ஹாபிழ் PM.பர்ஹானுத்தீன்
[செயலாளர், ஜம்மிய்யதுல் குர்ஆனில் ஹக்கீம்]





## அல் மத்ரஸதுன் நஷாதிய்யா




அதிபருடன் ஒரு சில மாவர்களை படங்களில் காணலாம்.

சம்மாந்துறையில் நடைபெற்று வருகின்ற குர்ஆன் மத்ரஸாக்களின் தொடரில் அஷ்ஷேஹ் ULM சலாஹுத்தீன் ஆசிரியர் அவர்களின் தலைமையில் 125D, மத்திய வீதி, சம்மாந்துறை-06 ல் அல்-மத்ரஸதுல் நஷாதிய்யா குர்ஆன் மத்ரஸா 46 மாணவர்களோடு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

2005 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இம்மத்ரஸா இரண்டு ஆரசிரியர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது எமது மத்ரஸா மாணவர்கள் குர்ஆனை மிகவும் திருத்தமானதாகவும், ஆழமாகவும், வஹியோடும், வாழ வேண்டும் என நோக்கோடு மாணவர்களுக்கு குர்ஆனுக்கு கூடிய கவனம் செலுத்துகின்றது. அல்லாஹ் அல் குர்ஆனில் "நீங்கள் குர்ஆனை ஓதிக் கொண்டும் கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருப்பதன் ஊடாக அல்லாஹ்வை சார்ந்து இருங்கள் என்று கூறுகின்றான். ஆனால் இன்று இளம் சிறுபராயத்தில் குர்ஆனை சரளமாக ஓதிமுடிக்கவேண்டும் என்ற நிலை மாறி அக்காலப்பகுதியில் இஸ்லாத்தையும், மார்க்கத்தையும், அறிவையும் தேடுவதும் ஏனைய மொழிகளையும் கற்றுக் கொள்கின்ற சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

" நபியே நீங்கள் அல்குர்ஆனை திருத்தமாக ஓதுங்கள்" அல்குர்ஆனை திருத்தமாக ஓதினால் தான் சிந்தனையோடு ஓதலாம் உணர்வுபூர்வமாக நிதானமாக ஓதினால் அதன் அர்த்தத்தை உள்வாங்க முடியும் அல் குர்ஆனை திருத்தமாக ஓதுவது மாத்திரமல்ல ராகமாகவும் அழகிய தொனியிலும் ஓத வேண்டும்.

" அல் குர்ஆனை திருத்தமாக ஓதாதவர்கள் எம்மைச் சார்ந்தவர்களல்லர் என்று எச்சரித்தார்கள் நபி (ஸல்) அவர்கள் எனவே இறைவனிடத்தில் இருந்து வந்த வஹியை இளம் சிறார்களுக்கு உரிய காலத்தில் வழங்குவதற்கும் குர்ஆனுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற சமூகமாகவும் மாறுவதற்கு இறைவன் அருள் புரிவானாக. ஆமீன்




லயன் கிளப் ஒப் சம்மாந்துறை கோல்டன் சிற்றி அமைப்பின் அங்கத்துவப் பணிப்பாளர் லயன் "தேசகீர்த்தி" அல்-ஹாஜ் ஏ.எம்.ஏ. றசீட் (ஜே.பி) அவர்களால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நன்நோக்கில் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

(நௌஷாத்)

# நூல் அறிமுகம்

தயாரிப்பு: நௌஷாத் ஏ கரீம்

## முஸ்லிம் இளைஞர்களுக்கான அருள் நெறிகள்

நூலாசிரியர்
கலாபூஷணம் யூ.எல்.அலியார்




நூலின் உட்புறத்தில் 13 தலைப்புக்களில் கூறப்பட்டுள்ள விடயதானங்கள் அனைத்திலும் சிறந்த புத்திமதிகளும் ஆலோசனைகளும் இடம்பெற்றுள்ளன. அல்லாஹ்வின் அன்பைப் பெற, சுற்றுச் சூழலில் வாழ்வோரிடம் பழக வேண்டியமுறை, நல்ல நண்பர்களிடம் சகவாசம், பிற மதத்தவரு டனான மனித நேயப் பண்புகள், நேர முகாமைத்துவம் போன்ற தலைப் புக்களில் பொன்னான போதனைகள் இடம்பெற்றுள்ளன. பெரும் பாலான பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு கூறுவதற்கு சங்கோஷப்படும் விடயங்க ளைக்கூட மிகக் கச்சிதமாக கையாண்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.

மறுமை நாளில் மனிதர்களுக்கு மிகமிகச் சமீபத்தில் சூரியன் உச்சம் கொடுக்கும் போது ஏற்படும் வேதனையைத் தாங்க முடியாது மானுடர்கள் தவிர்த்துக் கொண்டிருக்கும் வேளையில் ஏழு வகையான மனிதர்களுக்கு அல்லாஹ் நிழல் கொடுக்கிறான். ஆதில் ஒரு வகையினர்தான் அல்லாஹ்வின் அன்பைப் பெற்ற வாலிபர்கள் என்று நபி மொழி நவில்கிஜன்றது. இம்மை மறுமைப் பேறுகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் மனிதன் தனது வாலிப வயதில் மனம் போன போக்கில் சென்று தனது வாழ்க்கையை சீரழித்து சின்னாபின்னமாக்கிக் கொள்ளாதிருக்க இந்நூலில் சிறப்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் சகல பெற்றோரும், பிள்ளை களும் வாசித்துப் பயன் பெற வேண்டிய ஒரு பொக்கிஷம் என்று கூறலாம்.

**எழுத்தாளர்களே! நூல் அறிமுகம் பகுதிக்கு நீங்கள் வெளியிட்ட புத்தகத்தின் பிரதியொன்றை எமக்கு அனுப்பி வையுங்கள் நூல் அறிமுகம் பகுதியில் உங்கள் நூலும் இடம்பிடிக்கும்**

**நூல் அறிமுகம்**
**திறனொளி**
**112, பிரதேசப் பள்ளி வீதி**
**சம்மாந்துறை - 03**

## அபிமானிகள் அபிப்பிராயம்!

திறனொளி ஆசிரியர் அவர்கட்கு!

சம்மாந்துறையில் வெளியாகும் இச்சஞ்சிகை தூர்ந்து போகாமல் வெளிவர வல்ல நாயன் துணை புரிவானாக. ஏனெனில், முன்பு பல பத்திரிகைகள் வந்து மறைந்து போயின. உங்களைப் போன்ற இளை ஞர்களால் ஆற்றும் கலைப்பணி மென்மேலும் பெருக ஆசிக்கின்றேன்.

"சமூகமாமணி" ஏ.எம்.முஸ்தபா (சுக்கூர்)
மலையார் வீதி
விளினையடி-01
சம்மாந்துறை

**திறனொளி சஞ்சிகை பற்றி உங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அபிமானிகள் அபிப்பிராயம் பகுதியில் பிரசுரிப்போம். எழுதி அனுப்ப மறவாதீர்கள் உங்களின் அபிப்பிராயம் திறனொளி யின் வெற்றிக்கு வழி வகுக்கும்.**

HAMEED
Graphics & Technique

Our Services
- All Brand Laptop & Desktop Motherboard Chip Level Repairing
- Computer Networking
- CCTV Installation
- Computer Accessories Supplier
- Web Design
- Air Ticket Reservation
- Digital Printing
- Stamp (Polymer & Rubber)
- Type Setting (English & Tamil)
- AutoCAD Design (2D & 3D)

127/A, T.C. Road, Sammanthurai - 01.
077 8198608, 077 4967110
abdulirshad2007@gmail.com

# சிறு கதை — றிசானாவின் வறுமை

தொகுப்பு:-எஸ்.எல்.பிர்தௌஸியா (DO)

கடந்த இதழ் திறன்-10 இன் தொடர்ச்சி

**க**ணவனான நபீக் போன வேகத்திலேயே கைப்பந்தத்தில் ஓட்டோவில் இரண்டு பேர் தூக்கிக் கொண்டு வந்ததை பார்த்தவுடன் அழுகையைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியவில்லை.

'என்னங்க உங்களுக்கு பேசுங்க யா அல்லாஹ்! என்ன சோதனை இது' கூட வந்தவர்கள் றசீனாவை ஆறுதல் படுத்தினார்கள். அதில் ஒருவர் 'ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போனம். பக்கவாதம் ஏற்பட்டிருக்கு ஒரு காலும் கையும் வேலை செய்யாதாம் வீட்டில் இருந்து கொண்டே பயிற்சிகள் செய்தால் நாளடைவில் குணமாகலாம் என்று டாக்டர் சொன்னா'. கேட்டவுடன் றசீனாவுக்கு தலையே சுற்றியது. கணவனைப் பார்த்து விம்மி விம்மி அழுதாள். நபீக்கின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. அதை அவளுடைய கைகளினால் துடைத்தாள். றசீனா மூத்த பிள்ளை, அதனுடன் தம்பியும் தங்கையுமாக மூன்று பிள்ளைகள். றசீனாவுக்கு றிசானா பருவ வயதை அடைந்திருந்தால், அவள் பத்தாம் தரத்தில் கல்வி கற்கின்றாள். வீட்டின் நிலமை அவளுக்கு நன்றாகவே தெரியும். தந்தை கூலி வேலையாக மூட்டை சுமப்பதும், அந்தப் பணத்தை கொண்டு தாய் ஒரு வேளை கழிப்பதற்கு படும் பாடும், தம்பி, தங்கைகள் ஆசைப்படுவதை அனுபவிக்க முடியாத நிலையையும் உணர்ந்திருந்தாள். மனதுக்குள்ளே அழுவாள்.

' இறைவா எங்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை? வறுமையை போக்கி செல்வத்தையும் எனது குடும்பத்தாருக்கு நீண்ட ஆயுளையும் தா'....என்று அல்லாஹ்விடம் ஐந்து வேளை தொழுகையிலும் வேண்டிக் கொள்வாள். றிசானா குடும்ப நிலை உணர்ந்தவளாக அவளுக்குள் தன்நம்பிக்கை பிறந்தது. வாப்பாவும் இனி உழைத்து தர முடியாத நிலையில் இருக்கின்றார். என்று எண்ணிக் கொண்டே

"உம்மா நான் வெளிநாடு போறன் உம்மா .... நம்மட குடும்ப கஷ்டத்துக்கு ஒரு வழி பிறக்கும் நிறய சம்பாதித்து நாமளும் கஷ்டமில்லாம வாழலாம். என்னம்மா சரிதானே!... உம்மா! சலீம் நானா வெளிநாடு செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கின்றார். என்னையும் அனுப்புவதாக சொல்லுராறு" என்றாள். "என்ன மகள் சொல்லுராய் உனக்கு ஒரு வேலையும் தெரியா".

இல்லம்மா எனக்கு எல்லா வேலைகளும் தெரியும்தானே. ஒரு பிரச்சினையும் இல்லை. அவர்கள் சொல்லுகின்ற வேலைகளை எல்லாம் நான் செய்வன். நான் போறதுதான்' என்ற வாறே றிசானா வெளிநாடு பயணமானாள். கடல் கடந்து நாடு விட்டு நாடு செல்கின்றாள். மனதுக்குள் பல பல எண்ணங்கள் பட்டாம் பூச்சி போல் நெச்சிக்குள் சிறகு அடித்தன.

"றசீனா உனக்கு இனி எந்த கஷ்டமும் இல்ல உன்ட மகள் நிறைய சம்பாதிச்சு அனுப்பப் போறாள்" என்று சலீம் நானா றசீனாவை பார்த்து சொன்னதும் ஓரக் கண்களில் ஆனந்தக் கண்ணீர்... மெல்ல முந்தானைப் பிடவையை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். என்ன செய்வது இதற்கிடையில் றிசானா வெளிநாடு செல்வதற்கு என்ன காரணம் வீட்டில் முதற் பிள்ளை, வாப்பாவின் நிலமை, சகோதரி, சகோதரன் சிறிய வயது, சமைத்து போடும் உம்மாவுற்கும் வாய்க்கு ருசியாக சமைக்க முடியாத நிலமை, வறுமை தான்டவமாடியது. வீட்டின் நிலமையை எடுத்துக் கொண்டால் நான்கு அடி உயரமான மனிதன் குனிந்து கொண்டே வீட்டினுள்ளே போக வேண்டும். சுவர்கள் நாட்களை குறித்துக் கொண்டே இருந்தன. பலத்த காற்று அடித்தால் நின்று பிடிக்க முடியாத கூரை! ஓலையினாலும் கிழிந்த தகரத்தாலும் வேயப்பட்டிருந்தது. இதற்கிடையில் மின்சாரமும் இல்லை, இரவானால் நிலவின் வெளிச்சத்தில் வீதியில் நடமாட வேண்டியதுதான். எத்தனை வசதி படைத்தவர்கள் இருந்தும் யாரும் உதவி செய்வதற்கு முன்வரவில்லை. நபீக், றிசானாவைப் பற்றி அடிக்கடி கனவு காண்பார்.

"றசீனா நம்மட மகள் சவூதி அரேபியா சென்று இன்றையோடு மூன்று மாதம் ஆகிவிட்டது, ஆனால் மகள் றிசானாட்ட இருந்து எந்த பதிலும் வரவில்லையே...!"

"ஆமாங்க எனக்கும் ஒரே பயமாக இருக்குது. சலீம் நானாக் கிட்டதான் என்னெண்டு விசாரிக்கனும்". றசீனா சலீம் நானாவிடம் சென்று மகளைப் பற்றி விசாரித்தாள். அவரும், "நான் போண் பண்ணிட்டு என்ன என்று சொல்றன் உம்மா நீங்க கவலைப்படாதீங்க. றிசானாவுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படாது" என ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தார். றிசானாவின் தங்கையும், தம்பியும் அடிக்கடி பேசிக்கொள்வார்கள்.

"எனக்கு ராத்தா நிறைய சட்டையும், சப்பாத்துகளும் விளையாடுவதற்கு பொம்மைகளும் வாங்கிட்டு வருவார்" என்று றிசானாவின் தங்கை றிப்கா சொல்லுவாள். அதைக்கேட்ட தம்பி றிசாட் சொல்லுவான். "எனக்கும் ராத்தா பைசிக்கிள் வாங்கி வருவா" இவர்கள் பேசுவதை றசீனாவும், நபீக்கும் கேட்டுவிட்டு அழுவார்கள்.

"யா அல்லாஹ் என்ட மகளுக்கிட்ட இருந்து நல்ல செய்தியை தா ரஹ்மானே" என்று ஒவ்வொரு தொழுகையிலும் இறைவனை வேண்டிக் கொள்வாள் றசீனா. இவ்வாறு இருக்கும் போது தந்தி ஒன்று வந்தது. தந்தியை நபீக் பார்த்தவுடன் கண் கலங்கிப் போனார். "என்னங்க அதில் என்ன இருக்கு என்று சொல்லுங்க" றசீனா கேட்டதும் நபீக்கின் வார்த்தைகள் தடுமாறின. "நம்மட மகள் றிசானா கொலை செய்ததாம் அதற்கு ஜெயிலில் விசாரணைக்காக அடைத்து வைத்திருக்காம்." என்று சொல்லி முடிக்கும் முன்னே றசீனா மயங்கி விட்டாள். வீட்டில் அழுகைச் சத்தம் கேட்டவுடன் அயலவர்கள், உறவினர்கள், ஊர் மக்கள் எல்லோரும் விரைந்து வந்தார்கள். எல்லா உள்ளங்களிலும் சோகம் நிரம்பி வழிந்தது. ஆறுதல் வார்த்தைகள் வந்தவர்கள் சொல்லியும், யார் சொல்வதும் கேட்கின்ற நிலைமையில் அந்தக் குடும்பம் இல்லை.

"என்ட மகளை பார்க்கனும், என்ட மகள் எந்தக் குற்றமும் செய்யல்ல, என்ட மகள் என்னிட்ட தாங்க என்ன ஆறுதல் படுத்தினீங்களே அன்று என்ட பிள்ளைய கேட்டவுடன், இத்தன நாழும் ஜெயிலில் தானே இருந்து இருக்கா. என்ன பார்க்க விடலியே கூட்டிட்டு போகல்லியே நான் என்ன பாவம் செய்தன், எனக்கு ஏன் இந்த கஷ்ட நிலை என்ட றிசானா என்ட மகள்'

றசீனா தலைவிரி கோலமாக அழுது கொண்டேயிருந்தாள். எத்தனையோ பெரியவர்கள், தலைவர்கள், கல்விமான்கள் என்ன நடந்திருக்கும் என்று விசாரித்தார்கள். சவூதி அரேபியாவும் சென்றார்கள். கம்பிக் கூட்டுக்குள் குற்றம் புரியாமலே கொடும் பழி வந்து விட்டதே, பஞ்சு போன்ற பிஞ்சு மனம் துடியாய்த் துடிக்கின்றது. அழுது தோய்ந்த கண்களுடன் றிசானா பேசுவதில் பல உண்மைகள் வெளியாகின. அந்தப் பெரியவர்கள் றிசானாவைப் பார்த்ததும் மெய்சிலிர்த்துப் போனார். இந்த முகமா? குற்றம் செய்திருக்கும் என எண்ணுவதற்குள்ளே....

"சேர் என்னை என்ட வீட்டுக்கு கூட்டிட்டு போகத்தானே வந்து இருக்கிங்க...'? றிசானா கேட்டதும் பெரியவர் கண்களின் கண்ணீர் நிரம்பியது. அவருக்கு ஆமாம் என்று தலையை அசைப்பதை தவிர வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை. "றிசானா என்னிடம் உண்மையை, நடந்தவற்றை பயப்பிடாம சொல்லுங்க" றிசானா அழுது கொண்டே நான் சொல்லுவது அத்தனையும் உண்மை "எனது வேலை துணிகளைத் துவைப்பதும், எஜமானி அம்மாவின் 04 மாத குழந்தையைப் பார்த்துக் கொள்வதும்தான். வழமை போல் நானே சூவர் போத்தலில் உள்ள பாலை குழந்தை அழுததும் கொடுப்பன். குடித்து விட்டு தூங்கி விடுவார். இதேபோல்தான் அன்றும் நடந்தது. இப்படி ஒரு பழியை என் மீது சுமத்துரார்களே!

குழந்தை அழுதது போத்தலில் இருந்த பாலை பருக கொடுத்தன். குடித்து முடிந்ததும் இலேசாக இருமியது. குழந்தையின் நெஞ்சை எனது கைகளினால் தடவி விட்டன். பின்னர் குழந்தை தூங்கி விட்டது என எண்ணிக் கொண்டேன். பின்னர் எஜமானியம்மா என்னை அதட்டினார். என்னிடம் பல கேள்விகள் கேட்டார்கள்.

தொடர் 13ம் பக்கம்

12ம் பக்கத் தொடர்............

எனக்குஅவர்கள்சொல்வதுபுரியவில்லை.பொலிசிடம்ஒப்படைத்தார்கள். குழந்தை மௌத்தாகியதாகவும் நானே கொலை செய்ததாகவும் குற்றம் சாட்டினார்கள். "யா அல்லாஹ்! வேலை செய்ய வந்த இடத்தில் இப்படி ஒரு பழியா?" என்னை பொலிசார் அடித்தார்கள், உதைத்தார்கள், பயமுறுத்தினார்கள் அவர்கள் பாசை விளங்காமல் நானே கொலை செய்ததாக ஒப்புக் கொண்டேன். எனது குடும்பத்தை காப்பாற்றுவதற்கும், வறுமையில் இருந்து விடுபடவும்தான் இந்த நாட்டுக்கு வந்தன். என்னை எனது குடும்பத்தாருடன் சேர்த்து வைங்க சேர்.... ஒ....ஒ.... என்ட வாப்பா, உம்மாவைப் பார்க்கனும்" றிசானா அழுகையுடன் அவள் கதையை சொன்னாள். கேட்ட பெரியவர் றிசானாவின் தலையை தடவிய படி கண்களைத் துடைத்தார்.

"உங்களை விரைவில் குடும்பத்தாருடன் ஒப்படைக்கிறேன் மகள் நீங்க கவலைப்படாதிங்க துஆச்செய்யுங்கள்" என்றார், எத்தனையோ முயற்சிகள் செய்தும் றிசானாவின் எஜமானியம்மா சமாதானம் ஆகவில்லை. குழந்தையின் பெற்றோர் மன்னித்தால் றிசானா விடுதலை செய்யப்படுவார். என அந்த அரசாங்கமும் இஸ்லாமிய ஷரீஆவும் சொன்னது. பெரியவர் சந்தித்து இரண்டு நாளைக்குப் பிறகு றிசானா தூக்கில் இடப்பட்டார். என்ற செய்தி உலகம் பூராகவும் வெளியாகியது. "இன்னாலில் லாஹி வன்னா இலைஹி ராஜிஊன்" யாரும் எதிர்பார்க்கவில்லை. விடுதலை கிடைக்கும் என எண்ணிய றிசானாவுக்கும், குடும்பத்தாருக்கும், அவருக்காக முயற்சி செய்த அத்தனை உள்ளங்களுக்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. வீதிகளிலும், கடைத் தெருக்களிலும் மக்களின் பேச்சுக்கள்.

"குழந்தையின் தாயும் ஒரு பெண்தானே இவளுடைய உள்ளம் இரும்பாகி விட்டதே இவள் மன்னிக்கவில்லையே! இல்லாவிட்டால் இந்தப் பிள்ளைக்கு இப்படி நடந்து இருக்காதே" என்று சொல்லிக் கொண்டே வீதியில் சென்ற பௌசியா ராத்தா றிசானாவின் வீட்டுக்குப் போனார்.

றிசானாவின் பெற்றோர்கள் சோகத்தில் ஆழ்ந்து இருந்தார்கள். வீட்டுக்கு வராதவர்கள், எத்தனையோ கல்வி மான்கள், வசதி படைத்தவர்கள் என றிசானாவின் வீடு வந்து பல உதவிகளையும், ஆறுதல் வார்த்தைகளையும் சொன்னார்கள். இத்தனையும் ஒரு உயிருக்கு ஈடாகுமா? என்ற கேள்வி பலர் மத்தியில்! எப்படி எல்லாம் என்னுடைய குடும்பம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அந்த ஜீவன் இன்று உயிரோடு இல்லை. கல் வீடு, சகோதரன், சகோதரிக்கு தொழில் வாய்ப்புக்கள், வீதியே இன்று றிசானாவின் பெயரில். "அல்ஹம்துலில்லாஹ்" இன்னும் நிறைய உதவிகள் கிடைக்க வேண்டும். இருந்த போதிலும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் வறுமை தாண்டவமாடுகின்றது. பல பெண்கள் தற்கொலையும் செய்கின்றார்கள். இந்த றிசானா வெளிநாடு செல்லக் காரணம் என்ன? இத்தனை வசதிகளும் அன்று கிடைத்திருக்க வேண்டும். இளைஞர்களே, தனவான்களே, அரசியல் தலைவர்களே! கொஞ்சம் சமூகத்தில் நடக்கின்ற சீரழிவுகளையும் வறுமையின் கொடுமைகளையும் சற்று உற்று நோக்கினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டே முஸ்தபா நானா றிசானாவின் வீட்டுக்கு வந்தவர்களை ஆட்டொவில் ஏற்றிச் சென்றார். றசீனாவையும், நபீக்கையும் பார்த்து சுபைர் நானா சொல்கின்றார்.

"என்னங்க இப்ப நல்ல வசதியாகிட்டிங்க! அல்லாஹ் முகம் பார்த்து விட்டான்... இனிமேல் உங்களுக்கு கஷ்டம் என்பதற்கே இடமில்ல அப்படித்தானே! நபீக் "இந்த வார்த்தைகள் அவர்களின் இதயங்களை புண்ணாக்கியது. "இவர்கள் ஆறுதல் சொல்கிறார்களா? இல்ல ஏழ்மையை சுட்டிக் காட்டுகிறார்களா"? என்று சொல்லிய படி றசீனா அழுதாள். நபீக் தலையை முட்டிக் கொண்டே "என்ட பலவீனம்தான் இன்று எனது பிள்ளையை இழந்து தவிக்கின்றேன். எதை எடுத்தாலும் என்ட றிசானாவின் முகமும் அவர் பேசிய வார்த்தைகளும்தான் நெஞ்சில் நிலைத்து இருக்கு" என்று சொல்லிக் கொண்டே நபீக் லுகர் தொழுகைக்கு பாங்கு சொன்னதும் பள்ளிவாசலுக்கு விரைந்து சென்றார். றசீனா அல்லாஹ்விடம் "என்ட நிலைமை போல் யாருக்கும் வரக்கூடாது ரஹ்மானே...." என்றவாறே அவளும் வுழு செய்வதற்கு கிணற்றடியில் சென்றாள்.

## திறனொளியின் கேள்வி பதில்

தயாரிப்பு:-

மௌலவி ஐ.எல்.அப்துல் றஹீம் (தப்லீகி)

கேள்வி பதில் -07 இல் கேட்கப்பட்ட வினாவுக்கான சரியான விடை:- ஒன்பது

### கேள்வி பதில் -07 இற்கான வெற்றியாளர்கள்

கேள்வி பதில் -07 ற்கான விடைகளை ஏராளமானோர் எழுதி அனுப்பி வைத்துள்ளார்கள். அவர்கள் பற்றிய விபரம் விஷேட இதழாக வெளிவரவிருக்கும் திறன்-12இல் எதிர்பாருங்கள்

இவர்களுக்கு இஸ்ஹாக் (ரீஓ) பவுன்டேஸன் அமைப்பின் சார்பிலும், திறனொளி சார்பிலும் வாழ்த்துக்கள். இவர்களுக்கான பரிசில்கள் காலக்கிரமத்தில் வழங்கி வைக்கப்படும்.

### கேள்வி பதில் -08

திறனொளியின் "கேள்வி பதில் -08" இற்கான கேள்வி திறன்-12இல் எதிர்பாருங்கள்!

சரியான விடையினை தபாலில் எழுதி அனுப்பி பெறுமதியான பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*பரிசு வழங்குவோர்:-*

சமூக நலப் பணிகளில் முன்னின்று உழைத்து வரும் சம்மாந்துறை இஸ்ஹாக் (TO) பவுன்டேசன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ஹபீபுல் இன்ஷானி எம்.எல்.இஸ்ஹாக் அவர்கள்.

விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:-

**கேள்வி பதில் – 08**
**திறனொளி**
**112, பிர்தௌஸ் பள்ளி வீதி**
**சம்மாந்துறை–03**

இணையத்தில் இதயம் வென்ற வானொலி!
ஆஸாத் FM
online radio station
www.aazathfm.com




# விளையாடு களம்

**தயாரிப்பு:- ஏ. அக்கீல் சிஹாப்**



## ஒருநாள் போட்டியில் வரலாற்று சாதனை படைத்த இங்கிலாந்து

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி அதிகூடிய ஓட்டங்களைப் பெற்று வரலாற்று சாதனைப் படைத்துள்ளது.




அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வது ஒரு நாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 19ஆம் திகதி இங்கிலாந்தின் நொட்டிங்ஹேம் மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் இங்கிலாந்து அணியை துடுப்பெடுத்தாட பணித்தது. இதைத் தொடர்ந்து களமிறங்கிய இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியா அணி வீரர்களின் பந்துவீச்சுக்களை பதம் பார்த்தது.இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கட்டுகளை இழந்து 481 என்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.இதன் மூலம் இங்கிலாந்து ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையை பெற்ற அணி என்ற சாதனையை படைத்துள்ளது.இங்கிலாந்து அணி சார்பில் துடுப்பட்டத்தில் ஜோனி பேர்ஸ்டோ 139 ஓட்டங்களையும், எலக்ஸ் ஹெல்ஸ் 147 ஓட்டங்களையும், ஜேசன் ரோய் 87 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியில் இங்கிலாந்து அணி 242 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்று வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



## சந்திமாலுக்கு எதிரான ஐ.சி.சி யின் தடையை எதிர்க்க நாம் தயார்

**-இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை-**

இலங்கை அணியின் தலைவர் தினேஸ் சந்திமல், பயிற்றுவிப்பாளர் ஹத்துருசிங்க மற்றும் முகாமையாளர் அசங்க குருசிஹ்க ஆகியோரிற்கு எதிராக ஐ.சி.சி விதித்த தடைக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது.

மேற்கிந்திய தீவுகளில் உள்ள இலங்கை அணியினருடன் இது குறித்த பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட இலங்கை அதிகாரிகள் ஐ.சி.சி யின் தடையை எதிர்ப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.ஐ.சி.சி யிற்கு கடந்த 21ஆம் திகதி இது குறித்து அறிவிக்கப் போவதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அதிகாரிகள் ஐ.சி.சி யின் முடிவிற்கு எதிராக முறைப்பாடு செய்தால் அந்த முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு ஐ.சி.சி நீதியாணையாளர் ஒருவரை நியமிக்கவேண்டியிருக்கும். ஐ.சி.சி விதிமுறைகளை பின்பற்றுவதில் தொடர்ச்சியை பேணவில்லை மற்றும் உரிய நடைமுறைகளை பின்பற்றவில்லை என இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் தங்கள் முறைப்பாட்டில் தெரிவிக்கவுள்ளனர்.

இலங்கை அணித்தலைவரிற்கு எதிராக மூன்றாவது நாளே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவ்வாறு இருந்தால் இரண்டாவது நாளே சுமத்தியிருக்க வேண்டும் எனவும் இலங்கை அதிகாரிகள் கருதுகின்றனர்.அதேவேளை, இரண்டாவது நாள் நடுவர்கள் பந்தை தங்கள் வசம் எடுத்தவேளை அவர்கள் பந்தில் எந்த பிரச்சினையும் இருப்பதாக குறிப்பிடவில்லை எனவும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்கா, மெக்சிகோ, கனடா முதல் தடவையாக 3 நாடுகள் ஒன்றிணைந்து 2026 FIFA உலகக் கிண்ணத்தை நடாத்தவுள்ளன



*2026*ஆம் ஆண்டிற்கான FIFA உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை இணைந்து நடாத்துவதற்கான வாய்ப்பினை முதற்தடவையாக அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய நாடுகள் பெற்றுள்ளன. 2018ஆம் ஆண்டிற்கான குஜகுய உலகக்கிண்ண போட்டிகள் ரஷ்யாவில் கடந்த 14ஆம் திகதி முதல் ஜூலை 15ஆம் திகதி வரை மொஸ்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மற்றும் சொச்சி உள்ளிட்ட நகரங்களில் அமைந்துள்ள 12 மைதானங்களில் நடைபெறவுள்ளன.சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் 68ஆவது வருடாந்த மாநாடு மொஸ்கோ நகரில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது. இதில் அங்கம் வகிக்கும் 211 உறுப்பு நாடுகளில் 200 நாடுகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.இங்கு 2026ஆம் ஆண்டுக்கான 23ஆவது உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் நடைபெறும் இடத்தை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

தொடர் 15ம் பக்கம்



# வாசகர் வட்டம்

தயாரிப்பு:- எப்.எம்.இஹ்ஷான்



ஏ.எச்.முஹம்மட் நளீம்
8, மஜீட்புரம், மல்வத்தை-03
விருப்பமான துறை:
படப்பிடிப்பு



எம்.எஸ்.ஆதீக்
126, ஓ.பி.ஏ வீதி
ஒலுவில்-06
விருப்பமான துறை:
கவிதை, அறிவிப்பு

உங்களது திறமைகளுக்குக் களம் அமைக்கும் திறனொளி சஞ்சிகையின் வாசகர் வட்டத்துடன் இணைந்து அங்கத்தவராக விரும்புகின்றீரா அப்படியாயின் உங்களது புகைப்படத்துடன் சுயவிபரங்களையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.
திறனொளி வாசகர் வட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

வாசகர் வட்டம்
திறனொளி
112
பிரதேளஸ்
பள்ளி வீதி
சம்மாந்துறை-03

**சம்மாந்துறையில் தமிழ் முஸ்லிம்..................**

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிற்குள் தொல்பொருளியல் திணைக் களத்திற்கு சொந்தமான ஒன்பது இடங்கள் இத்திணைக்க ளத்தினால் வர்த்தமாணியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவ்விடங்களுக்கு எல்லை இடும் முதற்கட்ட பணியாக புதிய வளதாப்பிட்டி பிரதேசத்தில் இடம் பெற்றது.

குறித்த இடங்களில் தமது நடவடிக்கைகைகளை திணைக்கள அதிகாரிகள் தற்காலிகமாக நிறுத்தினாலும் எமது பரம்பரை யின் வாழ்ந்த இடங்களுக்கு நேர்ந்துள்ள அச்சுறுத்தலாக கருத வேண்டியுள்ளது. யுத்தம் முடிவிற்கு வந்ததையடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மை மக்களின் காரணி களை வன பாதுகாப்பு, வனஜீவராசிகள் மற்றும் தொல் பொருளியல் திணைக்களங்களின் ஊடாக கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் பரவலாக அரசின் உதவியோடு பேரினவாதி களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை தடுத்து நிறுத்த நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் அரசுக்கான ஆதரவினை முஸ்லிம் காங்கிரஸ் பரிசீலிக்க வேண்டிய நிலமை ஏற்படும் என்றார்.

(தகவல், படம்: செய்தியாளர் ஏ.எம்.அன்சார்)

## விளையாடு களம்

14ம் பக்கத் தொடர்ச்சி

இதில் அமெரிக்கா, கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய ஒருங்கிணைந்த நாடுகளுக்கு எதிராக மொரோக்கோ போட்டியிட்டது. இதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் வட அமெரிக்க நாடுக ளுக்கு ஆதரவாக 134 வாக்குகளும், மொரோக்கோவுக்கு ஆதரவாக 65 வாக்குகள் மாத்திரம் கிடைக்கப் பெற்றன. இதன்படி, எதிர்வரும் 2026ஆம் ஆண்டிற்கான உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளை வட அமெரிக்க நாடுகளான அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்து வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.இதன்படி, 32 வருடங்களுக்குப் பிறகு வட அமெரிக்காவில் FIFA உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளமை சிறப்பம்சமாகும். அத்துடன் முதன்முறையாக 3 நாடுகள் இணைந்து உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளை நடத்தவுள்ளமையும் விசேட அம்சமாகும்.முன்ன தாக 2002இல் ஜப்பான் மற்றும் வட கொரியா இணைந்து உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தியிருந்தன. முதன்முறையாக 2026இல் 48 அணிகள் கலந்துகொள்ளவுள்ளன. அத்துடன், 16 நகரங்களில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தில் 80 போட்டிகளில் 60 போட்டிகள் அமெரிக்காவில் நடைபெறும்.இதில் காலிறுதி, அரையிறுதிப் போட்டி களும்அங்குநடைபெறவுள்ளதுடன்,இறுதிப்போட்டிநியூயோர்க்கில்உள்ளமெட்லைப்மைதானத்தில்நடைபெறவுள்ளது.

இந்நிலையில், கனடாவில் 10 போட்டிகளும் மெக்சிகோவில் 10 போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக 1970 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகள் மெக்சிகோவிலும், 1994ஆம் ஆண்டு நடைபெற்ற 15ஆவது FIFA உலகக் கிண்ணப் போட்டிகள் அமெரிக்காவிலும் நடைபெற்றன.இதில் கனடா முதற் தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். எனினும், 2015இல் மகளிருக்கான FIFA உலகக் கிண்ணப் போட்டிகளை கனடா நடாத்தியிருந்தது. அத்துடன், இந்த மூன்று நாடுகளும் உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கான தகுதிச் சுற்றில் விளையாட வேண்டிய தேவை காணப்படாது. நேரடியாகவே உலகக் கிண்ணத்தில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.2022இல் நடைபெறவுள்ள 22ஆவது FIFA உலகக் கிண்ண கால்பந்து தொடர் கட்டார் நாட்டில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


புதிய வடிவம் புதிய சுவை புதிய நாமம்



# ஹலா சந்துஸ்

## வெண்ணிலா சொக்லேட் ஸ்ரோபரி சுவைகளில்

சிறியோர் முதல் பெரியோர் வரை உண்டு மகிழ்ந்திட ஹலா சந்துஸ்



குளிரூட்டப்பட்ட இனிப்புப் பண்டமாக சுவீட்ஸ் கடைகள்

மற்றும்

ஹோட்டல்களில் கிடைக்கிறது

**விஷேட ஓடர் கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்**

**தயாரித்து வினியோகிப்போர்**


**ஹலா சந்துஸ்**
ஜலாலியா வீதி
சம்மாந்துறை
தொலைபேசி இல:- 077 91 75 963



# Nihon Lanka Trading Company (pvt) Ltd

**சம்மாந்துறையில் அனைத்து விதமான மோட்டார் வாகனங்களும்**

**விற்கவும் வாங்கவும் சிறந்த நம்பிக்கையான இடம்**



## நிஹோன் லங்கா ட்ரேடிங் கம்பனி



Hybride வாகனங்களை உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

வாகன இறக்குமதி தீர்வைப் பத்திரத்திற்கான (Permit) வாகனங்களை நேரடியாக ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்



தொடர்புகளுக்கு

**ARM.Riyasdeen**
**077 041 63 67**
**ILM.Sathik**
**077 44 80 299**

**NIHON LANKA TRADING COMPANY (PVT) LTD**
264, Police Road,
Sammanthurai
Tel: 0672055977
E-mail: riyasdeen_fullmoon@yahoo.com


இச் சஞ்சிகையானது, சம்மாந்துறை திறனொளி கலை கலாசார ஊடக வலையமைப்பினால் வெளியிடப்படுகிறது.